**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 260 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.சேகர்

Date : 20.11.2025

**குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எலெக்டிரீசியன் வேலை செய்து வந்தேன். தற்போது நடக்க முடியாததால் வேலை செய்வதில்லை. நான் பணம் திரும்ப கொடுக்க வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளேன். சாட்சி முதலில் காசோலை சரஸ்வதி கொடுத்ததாக சொல்கிறார். பின்பு சரஸ்வதியின் கணவர் பணம் வாங்கியதாகவும், அவர் தான் காசோலை கொடுத்ததாகவும், சரஸ்வதி திரும்ப பணத்தை திரும்ப கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு பிறகு தரமாட்டேன் என்று சொல்கிறார். என்னுடைய தாவாவில் 5வது பத்தியில் 2வது வரியில் 01.04.2021 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சியிடம் 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து சார்வு செய்யப்பட்ட தாவா நகலில் 5வது பத்தியில் 01.06.2021 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்கிறார். அந்த தாவாவின் அலுவலக நகல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 4வது மாதம் 2021ல் பணம் கொடுத்தேன், தேதி நியாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 01.04.2021ல் தான் பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பணம் கொடுத்த தேதி தாவாவிலும், பிரதிவாதிக்கு அனுப்பிய தாவா நகலிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் மாற்றி மாற்றி முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால சரியல்ல. நான பிரதிவாதிகளுக்கு பணம கேட்டு சட்டஅறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை.

2) இறந்து போன கண்ணன் எலெக்டிரிக்கல் கடை வைத்து தொழில் செய்து நல்ல வசதி வாய்ப்புடன் நன்றாக இருந்து வந்தார் என்றால் சரிதான். நான் எலெக்டிரிசீனியாக தான் தொழில் செய்தேன், வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. நான் பெரியசாமி முன்னிலையில் பணம் கொடுத்தேன். நான் தாவாவில் பெரியசாமியின் பெயரை குறிப்பிடாமல் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணத்தை வட்டிக்காக கொடுக்கவில்லை. 5 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு வருமானம் இல்லை என்பதால் வட்டியும் கேட்டுள்ளேன். கண்ணன் நல்ல வசதிவாய்ப்புடன் இருந்ததால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ரூபாய் 3 லட்சம், ரூபாய் 5 லட்சம் என்று மூன்று தவணைகளாக பணம் கொடுத்தேன். நான் அதுபோல் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கண்ணன 18.05.2021ல் இறந்து விட்டார். வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதிகள் அவர் இறப்பிற்கு பின்பாக தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கண்ணன் உயிருடன் இருக்கும் போதே காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதிகளை போட்டு கொடுத்தார். காசோலையில் உள்ள கண்ணனின் கையெழுத்தும், அதில் நிரப்பப்பட்ட கையெழுத்தும் வேறு வேறு என்றால் சரியல்ல. அவர் தான் நிரப்பி கொடுத்தார். இதற்கு முன்பாக எனக்கும், கண்ணனுக்கும் எந்த கொடுக்கல், வாங்கல் கிடையாது.

3) பணம் வாங்கி கொண்டு காசோலைகளை கண்ணன் கொடுத்தார். ஆனால் காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதிகளுக்கு முன்பாகவே அவர் இறந்து விட்டார். கண்ணனின் பிள்ளைகள் மீது கண்ணன் வாங்கிய கடனுக்கு பணம் கேட்டு வழக்கு போடமுடியாது என்றால் சரியல்ல. கண்ணன் அவர் வியாபாரத்திற்காக தான் கடன் வாங்கினார். ஏப்ரல் 2020 முதல் பிப்ரவரி 2022 வரை கொரானா காலம் என்பதால் லாக்டவுன் காலம் என்றால் கண்ணனுக்கு நான் பணமே கொடுக்கவில்லை என்றாலும், கண்ணன் எனக்கு காசோலைகள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கண்ணன் உயிருடன் இருந்தவரை கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், அவர் கடனே வாங்கவில்லை என்றால் சரியல்ல. கண்ணனின் காசோலைகளை தான் தவறுதலாக உபயோகப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, அவரே தான் காசோலைகளை கொடுத்தார். நான் பணம் கொடுத்திருந்தால் கண்ணனின் வாரிசுகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும், பணமே கொடுக்கவில்லை என்பதால் தான் எந்தவிதமான சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கண்ணனின் காசோலைகளை தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4) தாவா 9, 10 பத்தியில் சொல்லியிருக்கும் சங்கதிகளுக்கும், இந்த வழக்கு பரிகாரங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3ம் நபருக்கு சொத்தை விற்பனை செய்தார் என்று தெளிவு இல்லாத சங்கதிகளை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. போலியான ஆவணங்கள் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.